| F–8775 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT1S1 |

# B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2023

## First Semester

## தமிழ்

## சிறப்புப் பாடம் – சிலப்பதிகாரம் – புகார்க் காண்டம்

## (CBCS – 2017 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. புகார் நகர மக்களுக்குக் கோவலன்–கண்ணகி ஆகியோர் திருமணம் எவ்வாறு அறிவிக்கப்பெற்றது?

2. 'அளிய தாமே, சிறு பசுங்கிளியே' – எனக் கோவலன் கூறக் காரணம் யாது?

3. இளங்கோவடிகள் 'பலவகைக் கூத்து' – எனக் குறிப்பிடுவனவற்றுள் நான்கனைக் குறிப்பிடுக.

4. ஐந்து வகை மன்றங்களின் பெயர்களை எழுதுக.

5. 'தலைக்கோல்' – குறிப்பு வரைக.

6. 'தென்திசை மருங்கின் ஓர் செழும்பதி' எது?

7. 'திங்கள் மாலை வெண்குடையான்' – யார்?

8. 'மாயப்பொய் பல கூட்டும் மாயத்தாள் பாடினாள்' – என எண்ணியவன் யார்? 'மாயத்தாள்' எனும் தொடர் யாரைக்குறிக்கிறது?

9. "பீடு அன்று" எனக் கண்ணகி தேவந்தியிடம் கூறக் காரணம் யாது?

10. "மதுரை மூதூர் யாது?" – என யார் யாரிடம் கேட்டார்?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) புகார் நகரின் சிறப்புக்களை விவரிக்க.

(அல்லது)

(ஆ) கண்ணகியின் இயற்கை அழகையும் புனைந்த அழகையும் கோவலன் எவ்வாறு பாராட்டினான்?

12. (அ) மாதவியின் பழம் பிறப்பையும் அவள் கல்விச்சிறப்பினையும் விளக்குக.

(அல்லது)

(ஆ) காதலரைப் பிரிந்த பெண்டிரின் நிலையைச் சிலப்பதிகாரம் எவ்வாறு சித்திரிக்கிறது.

13. (அ) புகார் நகரத்திருக்கோயில்களில் – இந்திரவிழாவை ஒட்டி நிகழ்த்தப்பட்ட வழிபாடுகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) மாதவி தன்னை அலங்கரித்துக் கொண்ட விதத்தை நும் பாடப்பகுதி கொண்டு விளக்குக.

14. (அ) யாழின் தன்மை குறித்துக் கானல்வரி கூறும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) மாதவி எழுதிய முதல் திருமுகத்தின் செய்திகளைத் தருக.

15. (அ) 'கண்ணகி கண்ட கனவு' யாது?

(அல்லது)

(ஆ) மதுரை நகர் நோக்கிச் செல்லும் வழியின் இயல்புகளைக் காந்தியடிகள் எவ்வாறு எடுத்துரைக்கிறார்?

**பகுதி இ** (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. கோவலன் கண்ணகி ஆகியோரின் இல்லற மாண்பு புகார்க் காண்டத்தில் எவ்வாறு விளக்கம் பெறுகிறது?

17. அரங்கேற்று காதை தரும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

18. புகாரில் இந்திரவிழா இனிது நடந்தவிதத்தை நும்பாடப் பகுதி கொண்டு விளக்குக.

19. கானல் வரி – கண்ணீர் வரியான சோகத்தை இளங்கோவடிகள் எங்ஙனம் சித்திரிக்கின்றார்?

20. நாடு காண் காதைச் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

———————

| F–8776 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT1C1 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2023.**

**First Semester**

**தமிழ்**

**இக்கால இலக்கியம்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours                    Maximum : 75 Marks

**பகுதி அ**                    ($10 \times 2 = 20$)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. பிள்ளைக் காதல் குறித்துப் பாரதியார் கூறுவன யாவை?

2. பாரதி-மனம் குறித்து கூறுவன யாவை?

3. நா.முத்துக்குமார் தூர் என்று எதனைக் குறிப்பிடுகிறார்?

4. 'பட்டாம்பூச்சி விற்பவன்' நூலாசிரியர் யார்?

5. 'பொன்னகரம்' விளக்கம் தருக.

6. எழுத்தாளர் அம்பை பற்றிக் குறிப்பு வரைக.

7. வல்லிக்கண்ணன் குறிப்பு வரைக.

8. துணிந்தவன் குறுநாவலில் வரும் கதைத் தலைவன் பெயரினைக் கூறுக.

9. 'கடமை' நாடகத்தில் இடம் பெறும் கதாபாத்திரங்கள் இரண்டன் பெயர்களைக் குறிப்பிடுக.

10. ஹீஸ்டன் நகர மக்களால் பெரிதும் பாராட்டப்பட்ட நாடகம் யாது?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) ஆங்கிலக் கல்வி குறித்துப் பாரதி கூறுவன யாவை?

(அல்லது)

(ஆ) பாரதி தன் தந்தையின் வறுமையை எவ்வாறு எடுத்துரைக்கிறார்?

12. (அ) 'ஒரு கிராமத்துக் கிரிக்கெட்' குறித்து நா.முத்துக்குமார் கூறுவன யாவை?

(அல்லது)

(ஆ) நா.முத்துக்குமார் கடன் பத்திரம் குறித்துக் கூறுவன யாவை?

13. (அ) சமையலறை குறித்து எழுத்தாளர் அம்பை தன் படைப்பு மூலம் எடுத்துரைக்கும் கருத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) அம்பை சிறுகதைகளில் காணலாகும் பெண்ணியச் சிந்தனைகளை எடுத்துரைக்க.

14. (அ) துணிந்தவன் குறுநாவலில் இடம்பெறும் கதைக்களம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) துணிந்தவன் குறுநாவலில் காணலாகும் வாழ்வியல் கருத்துக்கள் குறித்து எழுதுக.

15. (அ) கடமை நாடகத்தில் காணலாகும் சமுதாயச் சிந்தனைகளைக் கூறுக.

(அல்லது)

(ஆ) அரு.சோ, மனிதனின் கடமை குறித்து எவ்வாறு எடுத்துரைக்கிறார்?

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. பொருள் பெருமை குறித்துப் பாரதி கூறுவன யாவை?

17. மனித வாழ்க்கை, குறித்து பட்டாம்பூச்சி விற்பவன் கவிதைகளில் எவ்வாறு எடுத்துரைக்கப்படுகிறது?

18. 'ஒரு ஊரில் இரண்டு மனிதர்கள்' கதை உணர்த்தும் வாழ்வியல் கருத்துக்களைக் கூறுக.

19. 'துணிந்தவன்' குறுநாவலில் காணலாகும் பாத்திரப்படைப்பு குறித்து மதிப்பிடுக.

20. கடமை நாடகம் குறிப்பிடும் மனித உணவுகள் குறித்துக் கட்டுரை எழுதுக.

———————

| F–8777 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT1C2 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2023.**

**First Semester**

**தமிழ்**

**இலக்கணம் – நன்னூல் (எழுத்து) இலக்கணம் யாப்பு**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. நூல் என்பதன் பெயர்க்காரணத்தை எழுதுக.

2. எழுத்து என்றால் என்ன?

3. பதங்களின் இருவகைகளை எடுத்துக்காட்டுகளுடன் குறிப்பிடுக.

4. புணர்ச்சியின் மூவகை விகாரங்களைக் குறிப்பிடுக.

5. பூப்பெயர்முன் இனமென்மையும் தோன்றும்-இரு எடுத்துக்காட்டுகள் தருக.

6. எல்லாம் என்ற சொல் பெறும் சாரியைகள் யாவை?

7. குறுகி ஒலிக்கும் மூன்று உயிரெழுத்துக்களைக் குறிப்பிடுக.

8. நேரசை என்றால் என்ன?

9. வஞ்சிப்பாவின் இனங்களை எழுதுக.

10. மருட்பா என்பது யாது?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடை தருக.

11. (அ) மாணாக்கர்கள் பாடம் கேட்கும் முறையை எழுதுக.

(அல்லது)

(ஆ) உயிரெழுத்துக்களின் பிறப்பு முறையை விளக்குக.

12. (அ) முன்னிலை ஒருமை வினைச் சொற்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) காலம் காட்டும் இடைநிலைகளைச் சான்றுகளுடன் தருக.

13. (அ) யகர, ரகர, ழகர ஈறுகள் புணரும் நிலையை எழுதுக.

(அல்லது)

(ஆ) தம், நும், எம் எனும் நிலை மொழிகள் புணரும் நிலையை எழுதுக.

14. (அ) யாப்பின் உறுப்பாக வரும் எழுத்துக்களைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) தொடை என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

15. (அ) தமிழ்ப்பா வகைகளின் ஓசைகளைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) கலிப்பாவின் இனங்கள் குறித்து எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. சார்பெழுத்துக்களின் வகைகளைச் சான்றுகளுடன் விளக்குக.

17. மையீற்றுப் பண்புப் பெயர்களையும் அவை புணர்ச்சியில் அடையும் மாற்றங்களையும் விளக்குக.

18. உருபுப்புணரியல் கூறும் இலக்கண விதிகளைத் தொகுத்தெழுதுக.

19. தளைகளின் வகைகளைச் சான்றுகளுடன் எழுதுக.

20. ஆசிரியப்பாவின் இலக்கணம், அதன்வகைகள், இனம் ஆகியவற்றை விளக்குக.

| F–8778 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT2S1 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2023.**

**Second Semester**

தமிழ்

சிறப்புப் பாடம் – சிலப்பதிகாரம்-மதுரைக்காண்டம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. முல்லையும் குறிஞ்சியும் திரிந்தால் என்னாகும்?

2. வயந்தமாலை வடிவில் வந்தது யார்?

3. பொன்னின் வகைகள் யாவை?

4. சிறுமுது குறைவிக்குச் சிறுமையும் செய்தேன் – யார், யாரிடம் சொன்னது?

5. ஆய்ச்சியர் கண்ட தீ நிமித்தங்கள் யாவை?

6. சொல்லாடாள் – விளக்கம் தருக.

7. சான்றோரும் உண்டுகொல் – இடம் விளக்குக.

8. முற்பகல் செய்தான் பிறன்கேடு – செய்தவன் யார்? செய்தது யாது?

9. ஆரஞர் உற்ற வீரப்பத்தினி யார்?

10. வார்த்திகன் மனைவி பெயர் யாது?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) மாங்காட்டு மறையோன் கூறிய வழிகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) கோசிகன் கோவலனைச் சந்தித்த நிகழ்வைக் கூறுக.

12. (அ) கோவலன் கனவினை உரைக்க.

(அல்லது)

(ஆ) ஐயை பற்றிய செய்திகளைக் கூறுக.

13. (அ) கோவலன் கொலைபட்ட செய்தியைக் கண்ணகி அறிந்தநிலையை விளக்குக.

(அல்லது)

(ஆ) கண்ணகி ஊராரிடம் முறையிட்ட கருத்துக்களை உரைக்க.

14. (அ) கோப்பெருந்தேவியின் கனவைக் கூறுக.

(அல்லது)

(ஆ) கண்ணகி, நான்மாடக்கூடலை எரியிட்ட நிகழ்வைக் கூறுக.

15. (அ) வேளாண் பூதம் பற்றிய கருத்துக்களைத் தருக.

(அல்லது)

(ஆ) பெருமனைக் கிழத்தியர் கருத்தினைக் கூறுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. மதுரைக் காண்டத்தில் கவுந்தியடிகளின் பங்களிப்புப் பற்றிக் கட்டுரைக்க.

17. மாதரியின் அடைக்கலம் போற்றும் பண்பினைத் தொகுத்துரைக்க.

18. கோவலன் கொலைபட்ட நிகழ்வை விவரிக்க.

19. கண்ணகி வழக்குரைத்த திறத்தைப் புலப்படுத்துக.

20. ஊழ்வினையின் செயல்பாடுகளை மதுரைக்காண்டம் வழி விவரிக்க.

———————

| F–8779 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT2S2 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2023.**

**Second Semester**

தமிழ்

சிறப்புப் பாடம் – திருக்குறள்-அறத்துப்பால்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours　　　　Maximum : 75 Marks

பகுதி அ　　　　$(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. பிறவிப் பெருங்கடல் நீந்துவார் யார்?

2. அந்தணர் யார்?

3. பூசல் தருவது எது?

4. மாணப்பெரிது எது?

5. அழுக்காறு திருவா? பாவியா?

6. எது நினைக்கப்படும்?

7. பசி என்பது தீப்பிணியா? மாப்பிணியா?

8. ஊதியம் எது?

9. அறிவினான் ஆகுவது என்ன?

10. அறவினை என்பது யாது?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) நீத்தார் பெருமைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) மக்கட்பேறு அதிகாரக் கருத்துக்களை எழுதுக.

12. (அ) அன்பின் பெருமைகளை உரைக்க.

(அல்லது)

(ஆ) இனியவை கூறலின் சிறப்புக்கள் யாவை?

13. (அ) பொறையுடைமையின் பெருமைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) தீவினைக்கு அஞ்ச வேண்டுமா? விளக்கம் தருக.

14. (அ) புகழின் மேன்மைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) புலால் மறுப்பதற்கு வள்ளுவர் கூறும் உண்மைகளைத் தொகுத்துரைக்க.

15. (அ) நிலையாமை உணர்த்தும் வாழ்க்கை உண்மைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) மெய்யுணரும் முறைகளை எழுதுக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. வள்ளுவரின் கடவுள் கோட்பாடை விவரி.

17. அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை உணர்த்தும் கருத்தியல்களை விவரிக்க.

18. பொறையுடைமை, புறங்கூறாமை அதிகாரக் கருத்துக்கள் மனித வாழ்வியல் மேம்பட உதவுமாற்றை விவரி.

19. கள்ளாமையும், வாய்மையும் வாழ்க்கை மேம்பட உதவின என்ற கருத்தை விவாதிக்க.

20. வெகுளாமை, இன்னாசெய்யாமை அதிகாரக் கருத்துக்களை விவரிக்க.

———————

| F–8780 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT2C1 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2023.**

**Second Semester**

**தமிழ்**

**அற இலக்கியம்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. கல்வியே ஒருவர்க்குச் சிறந்த அணிகலன் என்று நாலடியார் கூறக்காரணம் யாது?

2. உயர்குடியில் பிறந்தவர்களிடத்தில் பொருந்தியிருக்கும் நல்ல குணங்கள் யாவை?

3. மான் வயிற்றில் பிறப்பது எது?

4. வெல்வது வேண்டின் விடவேண்டியது யாது?

5. ‘ஊனைத்தின்று ஊனைப் பெருக்காமை முன் இனிதே’ - விளக்கம் தருக.

6. நாட்டார்ப் புறங்கூறான் வாழ்தல் நனி இனிதே யானையுடைப்படை காண்டல் மிக இனிதே - ஏன்?

7. ‘சிற்றுளியால் கல்லும் தகரும்’ - பொருள் தருக.

8. ‘பொன்மலர் நாற்றமுடைத்து’ - விளக்கம் தருக.

9. ‘நீதிநூல்’ - குறிப்பு வரைக.

10. ஞானாசிரியர் என்பவர் யார்? அவரின் இயல்பு யாது?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) பெரியோர்களின் பெருமைகளாக நாலடியார் கூறுவனவற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) 'ஈரமிலாளர் தொடர்பு', 'உம்பர் உறைவார் பதி' -விளக்குக.

12. (அ) "ஆக்கம் சிதைக்கும் வினை" குறித்து விளம்பிநாகனார் குறிப்பிடுவதனைச் சுட்டி விளக்குக.

(அல்லது)

(ஆ) "மனைக்கு ஆக்கம் மாண்ட மகளிர்" என்று குறிப்பிடும் பாடலின் கருத்துகளை எழுதுக.

13. (அ) யார்மாட்டும் பொல்லாங்கு உரையாமை நன்று என்று கூறக்காரணம் யாது? விளக்குக.

(அல்லது)

(ஆ) 'இருமுதுமக்களைக் கண்டு எழுதல்காலை இனிது' என்று கூறவேண்டிய நோக்கம் என்ன?

14. (அ) 'தற்புகழ்ச்சி இகழ்ச்சியைத் தரும்' என்பதனை நீதிநெறிவிளக்கப் பாடல்வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) புறங்கூறாமையே நன்மதிப்பினைத் தரும் என்னும் கருத்தைக் குமரகுருபரர் வழி கூறுக.

15. (அ) அரசரின் இயல்பினை, மாயூரம் வேதநாயகம் பிள்ளை எங்ஙனம் கூறுகின்றார்?

(அல்லது)

(ஆ) ஞானாசிரியர் தொடர்பு, நன்மையைத் தரும் என்பதனை நீதிநூல்வழி கூறுக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளி.

16. மனிதர்க்கு, கல்வியே சிறந்த அணிகலன் என்பதனை நாலடியார் வழி விளக்குக.

17. நான்மணிக்கடிகையில் இடம்பெறும் ஒழுக்கநெறிகளைத் தொகுத்துரைக்க.

18. மாந்தர்க்கு இனியனவாகக் கூறும் அறச்செய்திகளை விவரித்து எழுதுக.

19. நீதிநெறிவிளக்கத்தில் இடம்பெறும் கல்விச்சிந்தனைகளை நிரல்படுத்தி விளக்குக.

20. ஞானாசிரியரின் பெருமை, குடிகளின் இயல்புகள் குறித்து மாயூரம் வேதநாயகம் பிள்ளை கூறுவதனைக் குறித்துக் கட்டுரை வரைக.

| F–8781 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT2C2 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2023.**

**Second Semester**

**தமிழ்**

**இலக்கணம் நன்னூல் (சொல்லும் அணியும்)**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. இயற்சொல் என்றால் என்ன?

2. தெரிநிலை வினைச்சொல்லின் இலக்கணம் யாது?

3. இருதிணைப் பொதுவினைகள் யாவை?

4. மரபு என்றால் என்ன?

5. ஒன்றொழி பொதுச்சொல் குறித்து எழுதுக.

6. சொல் என்னும் இடைச்சொல்லின் பொருட்கள் யாவை?

7. செய்யுளின் வகைகளை எழுதுக.

8. குளகம்-பொருள் தருக.

9. தீவக அணி என்றால் என்ன?

10. தற்குறிப்பேற்ற அணி குறித்து எழுதுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடையளிக்க.

11. (அ) பெயர்ச்சொல்லின் பொதுவிலக்கணத்தை எழுதுக.

(அல்லது)

(ஆ) வினைமுற்றின் இலக்கணம் கூறி விளக்குக.

12. (அ) வழுக்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) அறுவகை வினாக்களை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

13. (அ) எண்வகை இடைச்சொற்கள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) உயிர்ப்பொருட்களை நன்னூலார் எவ்வாறு வகைப்படுத்துகிறார் என்பது குறித்து எழுதுக.

14. (அ) கௌட நெறியினைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) தொடர்நிலைச் செய்யுள் இரண்டினைச் சான்றுடன் விளக்குக.

15. (அ) வேற்றுமை அணியைச் சான்று தந்து விளக்குக.

(அல்லது)

(ஆ) உருவக அணி குறித்த கருத்துக்களை விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடைளிக்க.

16. வேற்றுமை குறித்து எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

17. பொருள்கோளின் வகைகளைச் சான்றுகளுடன் விளக்குக.

18. தொகைநிலைத் தொடர்கள் குறித்து விரித்தெழுதுக.

19. பொதுஅணியியலில் இடம்பெறும் செய்திகளை விளக்குக.

20. உவமையணி குறித்து சான்றுகளுடன் விளக்கி எழுதுக.

———————

| F–8782 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT3S1 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2023.**

**Third Semester**

**தமிழ்**

**சிறப்புப்பாடம் – சிலப்பதிகாரம்-வஞ்சிக்காண்டம்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. 'நீவிர் யாவிரோ?' எனக் கேட்ட குன்றக்குறவர்க்குக் கண்ணகி கூறிய பதில் யாது?

2. கண்ணகி வானுலகம் சென்றது எவ்வாறு?

3. செங்குட்டுவன் வேண்மாளிடம் வினவியது யாது?

4. "அஞ்சினர்க்கு அளிக்கும் அடுபோர்அண்ணல்"-யார்?

5. 'கணிகையர் கோலம் காணாது ஒழிக'-என மாதவி தன் மகளுக்குக் கூறிச் செய்தது யாது?

6. மாடலன் செங்குட்டுவனிடம் நிலையாதவை எவையென எடுத்துக் கூறினான்?

7. கண்ணகிக்குத் தோழியாக இருந்தவள் யார்?

8. 'மீனக்கொடி' யாருக்கு உரியது?

9. 'முந்நூல் மார்பன்'-யார்?

10. மாலதி-யார்? அறிமுகம் தருக.

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) கண்ணகியைக் குலதெய்வமாகக் கொண்டு குறவர் பாடிய புகழ் மொழிகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) முருகனின் பெருமைகளைக் குன்றக்குரவை எங்ஙனம் எடுத்துரைக்கிறது?

12. (அ) மலைமிசைமாக்கள் செங்குட்டுவனுக்கு அளித்த பொருட்கள் யாவை?

(அல்லது)

(ஆ) கால்கோள் காதையில் போர்க்களக் காட்சி எவ்வாறு சித்திரிக்கப்படுகின்றது?

13. (அ) மாடலன் கங்கைக்கு வந்த காரணத்தை எவ்வாறு எடுத்துரைக்கிறான்?

(அல்லது)

(ஆ) கண்ணகிக்குக் கடவுள் மங்கலம் செய்தது எவ்வாறு? விளக்குக.

14. (அ) வாழ்த்துக்காதையில் இடம்பெறும் அம்மானை வரிப்பாடல் செய்திகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) கந்துகவழிப் பாடல் செய்திகளை எழுதுக.

15. (அ) மணிமேகலைத் துறவு குறித்த செங்குட்டுவனின் கேள்விக்குத் தேவந்தி கூறிய பதில் யாது?

(அல்லது)

(ஆ) தெய்வமுற்று எழுந்த தேவந்தி கூறியவை யாவை?

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. குன்றக்குரவையின் செய்திகளைத் தொகுத்துக் கட்டுரையாக்குக.

17. செங்குட்டுவனின் வீரச்சிறப்பினை நும்பாடப்பகுதி கொண்டு விவரிக்க.

18. மாடல மறையோன்-செங்குட்டுவன் உரையாடல் செய்திகளை எடுத்துரைக்க.

19. வாழ்த்துக்காதையில் இடம்பெறும் சிலப்பதிகாரக் கதாமாந்தர்களின் உரைகளைத் தொகுத்தெழுதுக.

20. வரந்தரு காதையின் மூலம் இளங்கோவடிகள் எடுத்துரைக்கும் அறச் செய்திகளைக் கட்டுரை வடிவில் தருக.

———————

| F–8783 |
|---|

| Sub. Code |
|---|
| 7SBS3A1 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2023.**

**Third Semester**

**தமிழ்**

**திறன் அடிப்படையிலான பாடம்: கோயிற்கலை**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிருவரிகளில் விடையளிக்க.

1. எண்ணங்களின் எழுச்சியைப் பல வண்ணங்களின் துணைகொண்டு எழுதுவோரை எவ்வாறு அழைத்தனர்?

2. இசை நூல்கள் இரண்டினை எழுதுக.

3. எண்பட்டை சதுர அமைப்பை எவ்வாறு அழைப்பர்.

4. பல்லவர்காலக் கோயில்களின் வகைகளை எழுதுக.

5. கழுகு மலையில் அமைந்துள்ள கோயில் பெயர் யாது?

6. நிகம்பசூதனி எதன் நினைவாக கட்டப்பட்ட கோயில்?

7. இராஜேந்திர சோழன் எடுப்பித்த கோயில்களில் மிகவும் சிறப்புவாய்ந்தது யாது?

8. தமிழ்நாட்டின் சுடுமண் சிற்பங்கள் இடைக்கப் பெற்ற இடங்கள் எவை?

9. இருவகை செப்புத்திருமேனிகள் எழுதுக.

10. நாட்டிய மகளிர் என்பவர்கள் யார்?

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடையளிக்க.

11. (அ) நடனக்கலையும் நாடகக்கலையும் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) மனைநூல்கள் பற்றி எழுதுக.

12. (அ) கோயில்களின் இலக்கணத்தில் கிரிவம், சிகரம் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) வெட்டுவான் கோயில் சிறப்பினை எடுத்துரைக்க.

13. (அ) சுதையாலான உருவங்கள் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) இராஜராஜன் எடுப்பித்த கோயில்களின் சிறப்புக்களை எடுத்துரைக்க.

14. (அ) தேன்மெழுகு முறையில் அமைக்கப்பெறும் செப்புத் திருவுருவங்கள் விளக்குக.

(அல்லது)

(ஆ) விஜயநகர மன்னர்கள் காலத்தில் அமைந்த கோபுரங்களின் சிறப்பினை எழுதுக.

15. (அ) கயிலைக்காட்சியின் சிறப்பினைக் கூறுக.

(அல்லது)

(ஆ) திருவரங்கத்தின் சிறப்பினை எடுத்துரைக்க.

பகுதி இ (3 × 10 = 30)

**எவையேனும்** மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. சிற்பக்கலையின் வகைகளையும் அதன் சிறப்புக்களையும் விளக்குக.

17. கோயில்களின் இலக்கணத்தினை எடுத்தியம்புக.

18. சங்ககால சிற்பக்கலைகளை எடுத்துரைக்க.

19. தமிழ்நாட்டுக் கோபுரங்கள் குறித்து கட்டுரைக்க.

20. பல்லவர்கால ஓவியங்கள் குறித்து கட்டுரை வரைக.

———————

| F–8784 |
|---|

| Sub. Code |
|---|
| 7NME3D |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2023.**

**Third Semester**

**தமிழ்**

**துறைசாரா விருப்பப்பாடம் : மக்கள் தகவல் தொடர்பியல்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. முகமதியர் காலத்தில் செய்தி சேகரித்தவர்கள் யார்?

2. 'குழூஉக்குறி' என்றால் என்ன?

3. சிகாகோவில் இந்தியாவிலிருந்து செய்தி கூறியவர் யார்?

4. 'எனக்குத் தாமதம் பிடிக்கும்' என்றவர் யார்?

5. துஷ்யந்தனுக்கு மடல் எழுதியது யார்?

6. வராகமுத்திரை எந்த அரசர்களுக்கு உரியது?

7. தமிழகத்தின் முதல் இரு வானொலி நிலையங்கள் யாவை?

8. தொலைக்காட்சியைக் கண்டறிந்தவர் யார்?

9. காடு செழித்தால், செழிப்பது யாது?

10. 'நீங்க நல்லா இருக்கணும்' என்ற திரைப்படம் கூறும் செய்தி யாது?

பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) பண்டைத் தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப்பெறும் மக்கட்சபைகளை விவரி.

(அல்லது)

(ஆ) தனியார் தகவலளிப்பு முறையை விளக்குக.

12. (அ) சமயத் துறையில் பேச்சுக்கலை பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) எது சிறந்த பேச்சுத்திறம் என்பதனைச் சான்றுடன் விளக்குக.

13. (அ) செப்புப் பட்டயங்கள் வழிச் செய்திப் பதிவுமுறைத் தொடர்பியலை விளக்குக.

(அல்லது)

(ஆ) மின்னணுச் சாதனங்கள் வழி செய்தி எவ்வாறு பரவுகிறது?

14. (அ) வானொலியின் பரந்துபட்ட பணியை விவரி.

(அல்லது)

(ஆ) இந்தியாவில் திரைப்படம் பற்றி எழுதுக.

15. (அ) சுற்றுப்புறக் கல்வி என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) தொலைக்காட்சி வழிச் சுற்றுச்சூழல் கல்விப்பணி குறித்து எழுதுக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. வளமைக் குறியீட்டுச் செய்திப் புலப்பாட்டை எழுதுக.

17. பேச்சுக்கலையின் இரு நிலைகள் குறித்து எழுதுக.

18. அச்சுவழிச் செய்திப் பரவலின் தோற்றம், வளர்ச்சி, பயன்பாடு பற்றிக் கட்டுரை வரைக.

19. தொலைத் தொடர்புச் சாதனங்கள் வழி செய்திப் பரவலை விவரி.

20. சுற்றுச்சூழல் கல்விக்கு அச்சுவழிச் சாதனங்களின் பங்களிப்பினை விவரி.

———————

| F–8785 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT4S1 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2023.**

**Fourth Semester**

தமிழ்

சிறப்புப்பாடம் – திருக்குறள்-இன்பத்துப்பால்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. ‘நோக்கம் இம்மூன்றும் உடைத்து’-விளக்குக.

2. தன் நோய்க்கு யார் மருந்தாவர். வள்ளுவர் கூறுவதை எழுதுக.

3. இன்னாது இனியார்ப் பிரிவு என்பதில் தலைவி நிலைப் பற்றி எழுதுக.

4. ‘விடில் அடும் நெருப்பு’ எது?

5. கைம்மாறா நோயும் பசலையும் தந்து-யார்கூற்று விளக்குக.

6. இருதலை யானும் இனிது-எது, விளக்குக?

7. ‘தொல்கவின் வாடிய தோள்’ குறித்து எழுதுக.

8. தும்பல் போலத் தோன்றிவிடுவது யாது?

9. உள்ளும் உயிர்க்காதல் நெஞ்சு-பொருள் தருக.

10. ஊடுதல் எதற்கின்பம்? அதனைப் பெறச் செய்ய வேண்டுவன யாது?

பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11\. (அ) தலையணங்குறுத்தல் அதிகாரம் வெளிப்படுத்தும் செய்திகளைச் சுருக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) தலைவியின் நலனைத் தலைவன் புகழ்ந்த பாங்கினை எழுதுக.

12\. (அ) 'கண்விதுப்பழிதல்' குறித்துத் திருக்குறள் எடுத்துரைக்கும் செய்திகள் யாவை?

(அல்லது)

(ஆ) படர்மெலிந்து இரங்கிய பாங்கை நும் பாடப் பகுதியைக் கொண்டு விளக்குக.

13\. (அ) பொழுதுகண்டு இரங்கல்-செய்திகளை எடுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) நினைந்தவர் புலம்பல் பாங்கைச் சுருக்கமாகக் கூறுக.

14\. (அ) கற்பியலில் உறுப்புநலன் அழிதல் முறையை வள்ளுவர் எங்ஙனம் வெளிப்படுத்துகிறார்?

(அல்லது)

(ஆ) தலைவியின் 'குறிப்பறிவுறுத்தல்' செய்தியை தலைவன் எவ்வாறு வெளிப்படுத்துகிறான்?

15\. (அ) 'புலவி' அதிகாரத்தின் வழி வெளிப்படும் தலைவியின் அன்பின் பெருக்கைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) தலைவி தன் நெஞ்சோடு புலத்தல் முறையை குறள் வழி எடுத்துரைக்க.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** கட்டுரை வடிவில் விடை தருக.

16. காதற் சிறப்புகளை வள்ளுவர் வெளிப்படுத்துகின்ற பாங்கினை ஆராய்க.

17. அலர்குறித்தும், பிரிவுகள் குறித்தும் திருவள்ளுவர் எடுத்து உரைக்கின்ற கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

18. நினைத்தவர் புலம்பல்களைத் திருக்குறள் வழி எடுத்துரைக்கவும்.

19. காதலனைப் பிரிந்ததால் ஏற்பட்டுள்ள துன்பத்தைத் தன் நெஞ்சிடம் சொல்லுதலைத் திருவள்ளுவர் எவ்வாறு சித்திரிக்கிறார்?

20. காமத்துப் பாலின் வழியாக, இல்லறநெறி எடுத்துரைக்கப்படும் அழகை விவரிக்க.

———————

| F–8786 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT4C1 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2023.**

**Fourth Semester**

**தமிழ்**

**காப்பிய இலக்கியம்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours　　　　Maximum : 75 Marks

**பகுதி அ**　　　　$(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. அமுதசுரபி பாத்திரத்தின் சிறப்பு யாது?

2. அறவண அடிகள் - குறிப்பு வரைக.

3. "யாதினும் இனிய நம்ப" - இது யாருடைய கூற்று?

4. இராமனைக் கண்டு வணங்கி குகன் தந்த பொருள்கள் யாவை?

5. சீராளன் என்பவன் யார்?

6. சிறுத்தொண்ட நாயனாரின் இயற்பெயரினைக் கூறுக.

7. தேவதாயின் அன்புரை யாது?

8. தேம்பாவணி - குறிப்பு வரைக.

9. வேடன் மனம் திருந்தக் காரணமான நிகழ்வினைக் கூறுக.

10. மானுக்குப்பிணை நின்ற படலத்தின் மையக்கருத்து யாது?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) புத்தரின் பெருமைகளைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) ஆபுத்திரனைப் பற்றி அந்தணர்கள் கூறிய செய்திகளை எழுதுக.

12. (அ) இராமன்-குகன் சந்திப்பு சிறப்பு வாய்ந்தது என்பதனைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) குகனின் சிறப்புகளைக் கூறுக.

13. (அ) சிறுத்தொண்டர் புராணத்தில் இடம்பெறும் வயிரவர், தாம் உண்பதாகக் கூறிய உணவு முறை குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) அன்பின் வென்ற தொண்டர் யார்? அவரது மனைவி திருவெண்காட்டு நங்கை செய்த அருஞ்செயலினைக் கூறி விளக்குக.

14. (அ) நசரேத் சிறு மனையின் சிறப்புகளைக் கூறுக.

(அல்லது)

(ஆ) தேவமைந்தனின் சிறப்புகளைக் கூறுக.

15. (அ) பிடிபடு மானின் தன்பால் பேரருள் சரப்ப நின்ற முகம்மது நபியின் பெருமைகளைச் சீறாப்புராணம் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) நபிகள் நாயகத்தைக் கண்டவுடன், மான் தனக்குள் கூறியவற்றை எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. மணிமேகலை, அமுதசுரபி பாத்திரம் பெற்ற சிறப்பினை விவரி.

17. இராமன், இலக்குவன் குகன் ஆகிய மூவரின் உணர்வு மொழிகளைக் குகப்படலத்தின்வழி விவரி.

18. சிறுத்தொண்டரின் பக்தித்திறத்தைச் சேக்கிழார் வழிநிறுவுக.

19. சூசையும் மரியாளும் மீண்டும் திருமகனைக் கண்டு இன்புற்ற நிலையினைத் தொகுத்து எழுதுக.

20. வேடனிடமிருந்து மான் தன்னை விடுவிக்கவேண்டி முகம்மது நபியிடமும், தன் இனத்திடமும் வேண்டிக்கொண்ட மொழிகளைச் சீறாப்புராணத்தின் வழி விளக்குக.

| F–8787 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT4C2 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2023.**

**Fourth Semester**

தமிழ்

தொல்காப்பியம் - எழுத்ததிகாரம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours　　　　　　　　Maximum : 75 Marks

பகுதி அ　　　　　$(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. வினா எழுத்துக் குறித்து எழுதுக.

2. உயிரெழுத்தின் பொதுப்பிறப்பு குறித்து எழுதுக.

3. புணர்மொழித் திரிபுகளை எழுதுக.

4. அல்வழிப் புணர்ச்சியின் வகைகளை எழுதுக.

5. விரவுப் பெயர் இயல்பாதல் குறிப்பிடுக.

6. அகம் + கை - புணர்ந்தமைவது எவ்வாறு?

7. கல் + சிறை - புணர்ந்தமைவது எவ்வாறு?

8. வல்லொற்றுத் தொடர்மொழி மிகுவது யாது?

9. அது + ஐ - புணர்ச்சியில் வந்தமையும் சாரியை யாது?

10. எண்ணுப்பெயர்ப் புணர்ச்சியில் முதல் குறுகுவது உடையது யாது?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) மாத்திரையின் இலக்கணம் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) உயிரொலிகளின் பிறப்பியல்பு குறித்து விளக்குக.

12. (அ) உயர்திணைப் பெயர்களின் புணர்ச்சியை எழுதுக.

(அல்லது)

(ஆ) மரூஉ சொற்களின் புணர்ச்சியை எழுதுக.

13. (அ) ஓகார ஈற்றுச் சொற்களின் புணரியல்பு சுட்டுக.

(அல்லது)

(ஆ) நாடுரி - பிரித்துப் புணர்ச்சி விதி தருக.

14. (அ) போலி எழுத்துக்கள் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) ஏழு என்னும் சொல்லின் முன் பத்துவரின் எவ்வாறு புணரும் என்பதை விளக்குக.

15. (அ) தொல்காப்பியரின் குற்றியலுகர கோட்பாட்டினைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) தொண்ணூறு - புணர்ச்சி விதி தருக.

## பகுதி இ (3 × 10 = 30)

**எவையேனும்** மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. தமிழ் எழுத்துக்களின் வகைமுறை சுட்டி விளக்குக.

17. இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி பற்றி விளக்குக.

18. இகர, ஈற்றுச் சொற்களின் புணர்ச்சி மரபினை எடுத்துரைக்க.

19. யகர, ரகர, வகரப் புள்ளியிறுகளின் புணரியல்பு காட்டி விளக்கு.

20. சொற்களோடு உருபுகள் புணருமாற்றை உணர்த்துக.

| F–8788 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT4C3 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2023.**

**Fourth Semester**

**தமிழ்**

**சிற்றிலக்கியம்**

**(CBCS – 2017 onwards)**

Time : Three Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. சுந்தரருக்காகத் தூது சென்றவர் யார்? அவர் யாரிடம் சென்றார்?

2. 'இருந்தமிழே உன்னால் இருந்தேன்' – இமையோர்

   விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்' – தொடரின் பொருள் யாது?

3. 'அபயமும் வரதமும் உபயமும் உடைய அணங்கு' – யார்?

4. அம்புலிப்பருவம் – குறிப்பு வரைக.

5. ஏழுபருவ மங்கையர்களைக் குறிப்பிடுக.

6. உலா நூல்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

7. கலிங்கத்துப்பரணியின் சிறப்பு யாது?

8. கலிங்கப்போருக்குரிய காரணங்கள் யாவை?

9. தமிழ்ப்பற்றால் தன்னையும் ஈந்தவன் யார்?

10. நந்திக் கலம்பகம் எங்கு பாடப்பட்டது? ஏன்?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) எட்டு வகைப் பொருள்கோள்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) ஐம்பெரும் காப்பியங்களைச் சிறப்புடன் விளக்கிக் கூறுக.

12. (அ) 'அவனி தழைந்திட மவுலி புனைந்தவள் ஆடுக செங்கீரை' என்று குமரகுருபரர் பாடக்காரணம் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) அம்புலி பாடுவதில் வல்லவர் குமரகுருபரர் என்பதனைப் பாடல்வழி நிறுவுக.

13. (அ) இராசராச சோழன், உலா வந்த காட்சியினைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) இராசராச சோழன் உலாவில் காணலாகும் இலக்கியச் சுவையினைக் கூறுக.

14. (அ) கலிங்கத்துப்பரணியில் காணலாகும் சோழப்படையின் சிறப்பினைக் கூறுக.

(அல்லது)

(ஆ) கலிங்கப்போரைக் கண்டு வந்த பேய், காளிதேவியிடம் கூறியதனை விளக்குக.

15. (அ) நந்தி வர்மனின் பண்புநலன்களைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) நந்தி வர்மனின் தமிழ்ப்பற்றினைக் கூறி விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. தமிழ்விடு தூதுவழி அறியலாகும் செய்திகளை நிரல்படுத்தி விவரி.

17. மீனாட்சியம்மனின் சிறப்புகளாகக் குமரகுருபரர் குறிப்பிடும் செய்திகளை விவரி.

18. இராசராச சோழன் உலாவில் காணலாகும் இராசராசனின் பெருமைகளை ஒட்டக்கூத்தர் வழி நின்று விளக்குக.

19. கலிங்கத்துப்பரணியில் காணலாகும் போர்க்களக் காட்சியைச் சிறப்பித்துக் கட்டுரை வரைக.

20. 'தெள்ளாறு எறிந்த நந்திவர்மன்' என்று புகழும் கூற்றை நந்திக்கலம்பகத்தின் வழி விவரி.

| F–8789 |
|---|

| Sub. Code |
|---|
| 7SBS4A1 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2023.**

**Fourth Semester**

**தமிழ்**

**திறன் அடிப்படையிலான பாடம் – தமிழிசைக்கலைகள்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours    Maximum : 75 Marks

**பகுதி அ**    $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. தமிழர் வகுத்த இசை வகைகள் யாவை?

2. பாணர்-குறிப்பு வரைக.

3. பண்டைக் காலத்து இசைக் கருவிகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

4. நரம்பிசைக் கருவிகளுக்கு ஏதேனும் இரு சான்றுகள் தருக.

5. நாட்டுப்புற இசைப்பாடல்கள் வரையறை தருக.

6. நீவிர் அறிந்த நாட்டுப்புற இசைக் கருவிகளின் பெயர்களைச் சுட்டுக.

7. அரங்கிசை-குறிப்பு வரைக.

8. மேளக்கர்த்தாக்கள் எத்தனை வகைப்படும்?

9. ‘கவிகுஞ்சரதாசன்’ எனும் பெயர் யாரைக் குறிப்பிடுகிறது?

10. பீதோவன் எந்நாட்டைச் சேர்ந்தவர்?

### பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) இசையின் தோற்றம் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) இசை குறித்து இளங்கோவடிகள் தரும் செய்திகளைச் சிலப்பதிகாரம் வழிநின்று தொகுத்துரைக்க.

12. (அ) தோற்கருவிகள் எவை? விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) பஞ்சமுக வாத்தியம் குறித்து விளக்குக.

13. (அ) நாட்டுப்புற இசையின் தனித்தன்மையை விளக்குக.

(அல்லது)

(ஆ) இசை வளர்ச்சிக்கு, நாட்டுப்புற ஆட்டங்களின் பக்க இசை எவ்வாறு துணைபுரிகிறது என்பதை விவரி.

14. (அ) எழுவகைப் பாலைகள்-பற்றி விவரிக்க.

(அல்லது)

(ஆ) மேளகர்த்தாக்கள்-விவரிக்க.

15. (அ) அருட்டிரு விபுலானந்த அடிகளின் இசைப்பங்களிப்பபைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) பிற்கால இசைக்கலைஞர்களின் பணித்திறத்தை விளக்குக.

### பகுதி இ $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. பழந்தமிழ் இலக்கியங்களில் இசைக்கலை குறித்துச் சொல்லப்படும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

17. தமிழர்கள் பயன்படுத்திய இசைக் கருவிகளின் வகைகளை விளக்கிக் கட்டுரை தருக.

18. மண்ணின் மாண்போடு மகிழ்த்தெழுந்தவை நாட்டுப்புற இசையென்பதை நும்பாடப் பகுதி வழி விளக்குக.

19. இசைக்கான இலக்கணங்கள் வகுக்கப் பெற்ற பாங்கினை விவரிக்க.

20. தமிழிசை வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட வல்லுநர்களின் பணிச்சிறப்பை விளக்கிக் கட்டுரை தருக.

---

| F–8792 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT6S1 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2023**

**Sixth Semester**

தமிழ்

சிறப்புப் பாடம் – பேச்சுக்கலை

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. மேடைப்பேச்சின் தோற்றம் எப்போது துவங்கியது?

2. உடல் மொழி என்றால் என்ன?

3. தன்னம்பிக்கைப் பேச்சு என்றால் என்ன?

4. பேச்சின் தொடக்க வகைகள் எத்தனை?

5. உவகைப் புலவர் யார்?

6. பேச்சுப் போட்டிக்குச் செல்பவர்கள் கவனிக்க வேண்டியவை யாவை?

7. "வேதம் புதுமை செய்" – யார் கடந்தது?

8. "பட்டி மன்றம்" – இலக்கியச் சான்று தருக.

9. சிலம்புச் செல்வர் யார்?

10. பண்பாட்டு மானிடவியல் நூலின் ஆசிரியர் யார்?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடை தருக.

11. (அ) பேச்சில் கண்ணியம் தேவை ஏன்?

(அல்லது)

(ஆ) பேச்சினால் ஆற்றல் பிறக்கிறது எவ்வாறு விளக்குக.

12. (அ) நேரத்தைப் பயன்படுத்துவது எவ்வாறு விளக்குக.

(அல்லது)

(ஆ) புதுமையான பேச்சு என்றால் என்ன?

13. (அ) முனைவர் கு. ஞானசம்பந்தன் முதல் பேச்சு அனுபவம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) ஆழமாகக் கற்றல் என்றால் என்ன? விளக்குக.

14. (அ) நேர்முக வருணனை எவ்வாறு அமைய வேண்டும்?

(அல்லது)

(ஆ) மகளிர் அரங்கங்களில் எவ்வாறு பேச வேண்டும்?

15. (அ) வாழ்க்கை வரலாறு குறித்து எவ்வாறு பேச வேண்டும்?

(அல்லது)

(ஆ) தமிழ்ச்சங்கங்கள் குறித்து எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. பேச்சு ஒரு தலை சிறந்த கலை என்பதை விளக்குக.

17. பேச்சின் தொடக்கம் குறித்து அறிஞர்களின் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

18. பல்வகைச் செய்திகள் குறித்துக் கட்டுரை வரைக.

19. நகைச்சுவையின் நன்மைகள் குறித்துக் கட்டுரை வரைக.

20. பேச்சாளனும் வாசிப்பும் குறித்துக் கட்டுரை வரைக.

---

| F-8793 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT6C1 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2023**

**Sixth Semester**

**தமிழ்**

**சங்க இலக்கியம் – புறம்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours | Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க

1. ‘படைமடம்படான்’ – யார்?

2. மயிலுக்குப் போர்வை அளித்த வள்ளல் யார்?

3. தன்புகழ் தன்னெதிரே கேட்க நாணியவன் யார்?

4. கடையெழு வள்ளல்களுள் மூவர் பெயர்களைக் குறிப்பிடுக.

5. ‘எல்லோர்க்கும் கொடுமதி மனை கிழவோயே’ – என்று குமணனைப் பாடியவர் யார்?

6. ‘தன்தலையை அரிந்து கொள்க’ என்று வாள் தந்த மன்னன் யார்?

7. பதிற்றுப்பத்து – பெயர்க்காரணம் தருக.

8. ஊன்துவை அடிசில் – விளக்கம் தருக.

9. பெருமாவிலங்கைத் தலைவன் யார்?

10. பாணனுக்கு நல்லியக்கோடன் அளித்த பரிசுகள் யாவை?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) கபிலர் பேகனைப் பாடிய புறநானூற்றுப்பாடலின் செய்தியைத் தருக.

(அல்லது)

(ஆ) 'செய்யா கூறிக்கிளத்தல்

எய்யாதா கின்றுஎம் சிறு செந்நாவே' – யார் கூற்று? விளக்கம் தருக.

12. (அ) "கொண்பெரும் கானம் பாடல் எனக்கு எளிதே" என்றவர் யார்? அவர்தம் பாடல் செய்திகளைத் தருக.

(அல்லது)

(ஆ) கடையெழு வள்ளல்களைப் பெருஞ்சித்திரனார் தம் புறப்பாடலில் எவ்வாறு எடுத்தியம்புகிறார்?

13. (அ) 'வயிரியர் இன்மை தீர்க்கும் குடிப்பிறந்தோன்' என்று பெருந்தலைச் சாத்தனார் யாரைப் போற்றுகிறார்? விளக்குக.

(அல்லது)

(ஆ) பிட்டங் கொற்றனைக் காவிரிப் பூம்பட்டினத்துக்காரிக் கண்ணனார் யாது கூறிப் புகழ்கிறார்?

14. (அ) கடல் பறக்கோட்டிய செங்குட்டுவனின் போர் மரச்சிறப்பினை 'சுடர்வீ வேங்கை' – எனும் பதிற்றுப்பத்துப்பாடல் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) செங்குட்டுவனின் கொடைச்சிறப்பை, 'கெங்கை மறவர்' எனும் பதிற்றுப்பத்துப் பாடல் எவ்வாறு எடுத்துரைக்கின்றது?

15. (அ) நல்லியக்கோடனின் தலைமைச் சிறப்பினைச் சிறுபாணாற்றுப்படை எவ்வாறு சித்தரிக்கின்றது?

(அல்லது)

(ஆ) வேலூர் எய்தினால் கிடைக்கும் பயன் எனச் சிறுபாணாற்றுப்படை கூறுவதைத் தொகுத்து உரைக்க.

## பகுதி இ $(3 \times 10 = 30)$

**எவையேனும்** மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. பேகனிடம் சங்கப்புலவர்கள் வேண்டிய பரிசில் யாது? நும்பாடப் பகுதி கொண்டு விளக்குக.

17. பெருஞ்சித்தனாரின் புறநானூற்றுப் பாடல்கள் வழி – குமணனின் கொடைச் சிறப்பை எடுத்துரைக்க.

18. புலவர், புரவலர் ஆகியோர்தம் பெருமைகளைப் புறநானூற்றுப் பாடல்கள் எவ்வாறு எடுத்துரைக்கின்றன?

19. கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனின் வரலாற்றைப் பரணர் தம் பதிற்றுப்பத்துப் பாடலின் வழியாக எடுத்துரைக்கும் பாங்கை விவரிக்க.

20. பண்டைத் தமிழர்தம் வீரம், விருந்தோம்பல், கலை, கொடைப்பண்பு ஆகியவற்றைச் சிறுபாணாற்றுப் படை எவ்வாறு எடுத்தியம்புகின்றது?

———————

| F–8794 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT6C2 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2023.**

**Sixth Semester**

தமிழ்

தொல்காப்பியம்-பொருளதிகாரம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. பெண்பாலுக்கு உரிய முப்பண்புகள் யாவை?

2. பகற்குறி-விளக்கம் தருக.

3. 'ஐயர் யாத்தனர் கரணம்' எப்போது?

4. வேந்துறு தொழிலுக்குரிய காலம் எவ்வளவு?

5. "அறத்தொடு நிற்றல்"-விளக்கம் தருக.

6. வெகுளி எப்போது தோன்றும்?

7. மெய் உவம உருபுகள் எத்தனை?

8. 'உள்ளுறை உவமம்'-விளக்குக.

9. 'மறி'பொருள் தருக.

10. ஓரறிவுடைய உயிரினம் யாது?

**பகுதி ஆ** (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) 'தலைவனுக்கு நிகழும் கூற்று' இடங்களைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) ஐயம் நீக்கும் கருவிகளைக் குறிப்பிடுக.

12. (அ) கற்பு மணம் குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) கரணம் குறித்து விவரித்து எழுதுக.

13. (அ) 'அறத்தொடு நிற்றல்'குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) மெய்ப்பாடுகளின் வகைகளை எடுத்துரைக்க.

14. (அ) உவமப்போலியின் தொகையினை விவரிக்க.

(அல்லது)

(ஆ) மெய் உவம உருபுகளை விளக்குக.

15. (அ) ஆண்பால் பெயர்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) அரசர்க்கு உரியனவாகத் தொல்காப்பியர் கூறுவன யாவை?

**பகுதி இ** (3 × 10 = 30)

எவையெனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. களவில் தலைவி கூற்று நிகழும் இடங்களை விளக்கிக் கட்டுரை தருக.

17. கற்பியலில் தலைவன் கூற்று நிகழும் இடங்கள் சுட்டப்படுவனவற்றை விவரிக்க.

18. மெய்ப்பாட்டியல் தரும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

19. உவமையின் சிறப்பியல்புகளை விளக்கி, அதன் உருபுகள் குறித்துக் கட்டுரை தருக.

20. மரபியல் தரும் இளமைப் பெயர்கள் குறித்து விளக்கி எழுதுக.

| F–8795 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT6C3 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2023.**

**Sixth Semester**

**தமிழ்**

**மொழி வரலாறு**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. கணக்கறிவு எப்போது வளர்ந்தது?

2. நாகரிகமாகப் பேசுபவர்கள் யார்?

3. பேச்சு மொழியை எவ்வாறு மக்கள் கற்றுக் கொள்கின்றனர்?

4. மரபு மொழிக்கு ஏன் மதிப்புக் கொடுக்க வேண்டும்? கூறுக.

5. மருஉ என்றால் என்ன?

6. சொல் எப்போது பொருள் உடையதாக மாறுகிறது?

7. சமய அறிஞர்களின் மொழி எவ்வாறு உள்ளது?

8. குறு மொழி என்றால் என்ன?

9. ஒட்டுநிலை என்றால் என்ன?

10. வாக்கிய அமைப்பு எவ்வாறு அமைய வேண்டும்?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) எழுத்து மொழி என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) மக்களின் சிறப்பியல்புகள் யாவை?

12. (அ) திணை-பால் வேறுபாடு குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) நினைவாற்றல் யாருக்கு அதிகம்? விளக்குக.

13. (அ) திசைச் சொல் என்றால் என்ன? எ.கா. தருக.

(அல்லது)

(ஆ) மொழிக் கலப்பில் ஏற்படும் சிக்கல்கள் யாவை?

14. (அ) இலக்கிய மொழி வேறாக இருப்பதன் காரணம் யாது?

(அல்லது)

(ஆ) குழந்தைப் பேச்சின் மூவகை நிலைகள் குறித்து எழுதுக.

15. (அ) பிரிநிலை என்றால் என்ன?

(அல்லது)

(ஆ) இக்காலப் பேச்சு வழக்குக் குறித்து எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. மொழியின் பண்பாடு குறித்துக் கட்டுரை வரைக.

17. பெயரின் பெருமை குறித்துக் கட்டுரை வரைக.

18. வடமொழியில் திராவிடச் சொற்கள் கலந்துள்ளமைக் குறித்துக் கட்டுரை வரைக.

19. குழந்தை மொழி கற்கும் திறன் குறித்துக் கட்டுரை வரைக.

20. எழுத்தின் தோற்றம் வளர்ச்சி குறித்துக் கட்டுரை வரைக.

| F–8796 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLTE3A |

**B.Lit DEGREE EXAMINATION, APRIL 2023.**

**Sixth Semester**

**தமிழ்**

**விருப்பப்பாடம் - கல்வெட்டியல்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. 'குடும்பு ஆடல்' குறித்து எந்த ஊர்க் கல்வெட்டு கூறுகிறது?

2. கேரளாவில் கிடைக்கும் எழுத்துக்களை எவ்வாறு பெயரிட்டு அழைத்தனர்?

3. ஒரு கோடி என்பதைக் கல்வெட்டில் எவ்வாறு எழுதினர்?

4. தஞ்சை பெரிய கோயில் கல்வெட்டு எந்த மொழியில் அமைந்துள்ளது?

5. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகள் எத்தனை வெளிவந்துள்ளன.

6. தென்னிந்திய வரலாற்றுக் கல்வெட்டுக்கள் தொகுதியை வெளியிட்ட வெளிநாட்டவர் யார்?

7. ஆய எழுத்து என்றால் என்ன?

8. உணர்வெழுத்து என்றால் என்ன?

9. ஹிரஹடஹல்லிச் செப்பேடு யாரைப்பற்றி குறிப்பிடுகிறது?

10. பிரம்மதேயம் என்றால் என்ன?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடையளிக்க.

11. (அ) தர்ம மஹா மாந்தர்களின் பணிகள் யாவை?

(அல்லது)

(ஆ) ஜபுலவர்மன் பராந்தக நெடுஞ்சடையன் காலத்தில் கிடைத்த எழுத்துக்கள் குறித்து எழுதுக.

12. (அ) சோழ மன்னர்கள் காலக் கல்வெட்டுகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) கல்வெட்டுக்கால முகத்தல் அளவைகள் யாவை?

13. (அ) சென்னை தமிழ் வரலாற்றுக் கழகம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழகத் தொல் பொருள் ஆய்வுத்துறை கல்வெட்டுத் தொகுதிகள் குறித்து எழுதுக.

14. (அ) இலங்கை முத்திரை உருவம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) எழுத்தில் ஏற்பட்ட நான்கு கட்ட வளர்ச்சி குறித்து எழுதுக.

15. (அ) செப்பேடும் மொழியும் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பல்லவர்காலச் செப்பேடுகளின் பிரிவுகள் யாவை?

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. மெய்யெழுத்துக்கள் பெற்றுள்ள மாற்றங்கள் குறித்துக் கட்டுரை வரைக.

17. கிரந்த எழுத்துக்கள் குறித்துக் கட்டுரை வரைக.

18. படி எடுக்கும் முறைகள் குறித்துக் கட்டுரை வரைக.

19. எழுத்துக்கலை குறித்துக் கட்டுரை வரைக.

20. சமஸ்கிருதக் கல்வெட்டுக்கள் குறித்துக் கட்டுரை வரைக.

———————

| F–8798 |
|---|

| Sub. Code |
|---|
| 7SBS6A1 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2023.**

**Sixth Semester**

**தமிழ்**

**திறன் அடிப்படையிலான பாடம் : படைப்பாக்கவியல்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. வெண்பாவில் இடம்பெறும் தலைகள் எவை?

2. ஆசிரியப்பாவுக்கு உரிய ஓசை யாது?

3. தமிழின் தலை சிறந்த புதுக்கவிதையாளர்கள், பெயர்களைக் குறிப்பிடுக.

4. ஹைக்கூ - குறிப்பு வரைக.

5. சிறுகதையின் பக்கங்கள் எவ்வளவில் அமைவது நல்லது?

6. புதுமைப்பித்தனின் சிறுகதைகள் - பெயர்களைக் குறிப்பிடுக.

7. தமிழில் தோன்றிய நாடக நூல்கள் பெயர்களைத் தருக.

8. நாடகம் - வரையறை தருக.

9. திரு.வி.க.வின் கட்டுரைகள் பற்றிக் குறிப்புத் தருக.

10. தனித்தமிழ்க் கட்டுரையாளர்கள் பற்றிய அறிமுகம் தருக.

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) 'இயற்கை அழகே அழகு' எனும் பொருண்மையில் மரபுக் கவிதை படைக்க.

(அல்லது)

(ஆ) 'எல்லா உயிரும் தொழும்' - என்பதை ஈற்றடியாகக் கொண்டு மூன்று வெண்பாக்கள் புனைத்தளிக்க.

12. (அ) 'மீளவும் வந்திடுமோ?' - என்ற பொருண்மையில் ஒருபக்க அளவில் புதுக்கவிதை புனைக.

(அல்லது)

(ஆ) மழையின் அழகை வியந்து ஐந்து ஹைக்கூக் கவிதைகள் புனைக.

13. (அ) 'நெஞ்சம் மறக்காத நிகழ்வு' ஒன்று பற்றி - ஒரு பக்கக் கதை புனைக.

(அல்லது)

(ஆ) நடப்பியல் கதை - புனைவதில் ஏற்படும் சிரமங்களை எடுத்துரைக்க.

14. (அ) வரலாற்று நாடகம் புனைவதற்குரிய இன்றியமையாக் கூறுகள் எவை?

(அல்லது)

(ஆ) நீவிர் கண்ட (அல்லது) படித்த நாடகம் பற்றி விமர்சனம் தருக.

15. (அ) இலக்கியக் கட்டுரை எழுதுவதற்குரிய கருதுகோள் எவ்வாறு அமைதல் வேண்டும்?

(அல்லது)

(ஆ) வருணனைக் கட்டுரைக்குரிய இயல்புகளை எடுத்துரைக்க.

பகுதி இ (3 × 10 = 30)

**எவையேனும்** மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. 'சொல்லி முடியாத சுகம்' என்ற பொருண்மையில் நெடிய மரபுக்கவிதை புனைந்துரைக்க.

17. காலத்தைக் குறியீடாகக் கொண்டு நெடிய புதுக்கவிதை புனைக அல்லது அலை ஓயாப் பெருங்கடலின் பேரழகை வியந்து பத்து ஹைக்கூக் கவிதைகள் இயற்றுக.

18. பின்வரும் தலைப்புகளுள் ஏதேனும் ஒன்று பற்றிச் சிறுகதை புனைக.

(அ) அணைய மறுக்கும் நெருப்பு

(ஆ) துயரின் மடியில்

(இ) பொம்மை உலகம்

19. ஏதேனும் ஒரு பொருண்மை பற்றி நாடகம் எழுதுக.

(அ) புலவரின் பெருமை (வரலாற்று நாடகம்)

(ஆ) இயந்திர மருத்துவர் - 2020 (அறிவியல் நாடகம்)

(இ) இன்னுமா உறக்கம்? (சமூக விழிப்புணர்வு நாடகம்)

20. அண்மையில் படித்த ஒரு நூல் குறித்த விமர்சனக் கட்டுரை அல்லது உமது ஊரில் நடைபெற்ற தமிழர் மரபு விழாக் குறித்த வருணனைக் கட்டுரையினை எழுதுக அல்லது சூழல் காப்புக் குறித்த விழிப்புணர்வுக் கட்டுரை தருக.

———————

| F–8799 |
|---|

| Sub. Code |
|---|
| 7SBS6A2 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2023.**

**Sixth Semester**

**தமிழ்**

**திறன் அடிப்படையிலான பாடம் : தமிழ் பயிற்றும் முறை**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** ($10 \times 2 = 20$)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. தாய்மொழியின் இயல்பு யாது?

2. பாடத்திட்டம் என்றால் என்ன?

3. கல்வியின் நோக்கத்தை விளக்குக.

4. மாண்டிஸாரி கல்விமுறையின் மூன்று பிரிவுகள் யாவை?

5. வாய்மொழிப் பயிற்சியின் பயன்களைக் குறிப்பிடுக.

6. குழந்தைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பெறும் கதைகள் எவ்வாறு இருக்க வேண்டும்?

7. 'கருத்துணரும் ஆற்றல்' எப்போது கைவரும்?

8. நல்ல கையெழுத்தை உருவாக்க உதவும் வழிகளைக் குறிப்பிடுக.

9. இலக்கிய நூல்களுக்கு உரிய நான்கு குறிக்கோள் பொருள்கள் யாவை?

10. இலக்கணம் பயிற்றுவிப்பதற்கான நோக்கம் யாது?

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) தாய்மொழியே பயிற்றுமொழியாவதால் ஏற்படும் பயன்களை விவரிக்க.

(அல்லது)

(ஆ) பயிற்றலின் அடிப்படை விதிகளை விளக்குக.

12. (அ) பயிற்றுவித்தலில் பழைய முறைகள் எவ்வாறு அமைந்தன? விவரிக்க.

(அல்லது)

(ஆ) "வார்தாக் கல்விமுறையை" விவரிக்க.

13. (அ) வாய்மொழிப் பயிற்சிக்குரிய பயிற்று முறைகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) வாய்விட்டுப் படித்தல், வாய்க்குள் படித்தல் ஆகியவற்றில் ஏற்படும் பயன்களை எடுத்துரைக்க.

14. (அ) மொழிப் பயிற்சிகள் எவ்வாறு அமைதல் வேண்டும்? அவற்றின் பயன்களைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) படைப்பாற்றலை வளர்த்துக் கொள்ளும் வழிகளைக் குறிப்பிடுக.

15. (அ) கவிதைப் பாடத்தைத் தொடங்கும்முறை, கவிதையை விளக்கும் முறை ஆகியவற்றை விவரிக்க.

(அல்லது)

(ஆ) இலக்கணத்தின் இன்றியமையாமையை எடுத்துரைத்து, அதனைப் பயிற்றுவித்தலுக்கான நோக்கங்களை விவரிக்க.

பகுதி இ (3 × 10 = 30)

**எவையேனும்** மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. கல்வித் திட்ட ஆராய்ச்சி குறித்துக் கட்டுரை தருக.

17. பயிற்றுவித்தலுக்கு உதவும் துணைக்கருவிகளின் (Teaching aids) பயன்பாட்டை விளக்குக.

18. வாய்மொழிப் பயிற்சி குறித்து டாக்டர். ந. சுப்புரெட்டியார் கூறுவனவற்றை எடுத்துரைக்க.

19. கவிதை கற்பித்தலில் மேற்கொள்ள வேண்டிய முறைமைகளை விவரிக்க.

20. இலக்கணத்தை இனிமையுறக் கற்க மேற்கொள்ள வேண்டிய முயற்சிகளை விளக்குக.

———————